# உயிர்ப்பு

## கணேசன்குரல் -03

கரு

10
*
03
*
1958

உரு

05
*
10
*
2003

வெளியீடு :
மாணவர் மன்றம்
வ/பாவற்குளம் கணேசுவரா ம.வி

(Printed & Roneo by : Ganeswara M.V)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர்ப்பின் உள்ளே


- தமிழ் மொழி வாழ்த்து
- வித்தியாலய அதிபரின் ஆசிச் செய்தி
- தமிழ் மன்றப் போசகரின் வாழ்த்துச் செய்தி
- இனியொரு விதி செய்வோம்
- கிரிக் கெட்
- உலக நாடுகளின் தலைநகரங்களும் நாணயங்களும்
- உலகாழ்வாய் தமிழ்மாதே
- வைரசு காச்சல் பரவும் விதம்
- அறிந்ததும் அறியாததும்
- ஐக்கிய நாடுகள் அமையமும் அதன் அங்கங்களும்
- வர்த்தகத்தின் தோற்றம்
- லிங்கன் கென்னடி அபூர்வ ஒற்றுமை
- சிறுவர் துஸ்பிரயோகத்திற்கு முடிவு எம்கையில்
- கணிதம் கற்றல் கற்பித்தலில் காணும் இடர்கள்
- நல்ல நூலே நல்ல நண்பர்கள்
- கையெழுத்து
- வெள்ளை என்பது
- சுயமிழந்த நினைவுகள்
- நிலத்தின் விடியல்கள்
- எமது பாடசாலை
- தமிழ் மொழி வாழ்த்து
- வவுனியா செட்டிகுள கல்விக் கோட்ட கீதம்
- பாடசாலை கீதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே!

வானமளந்த தனைத்து மளந்திடும்
வண்மொழி வாழியவே!

ஏழ்கடல் வைப்பினும் தன் மணம் வீசி
இசைகொண்டு வாழியவே!

எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே!

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!

தொல்லை வினைதரு தொல்லையகன்று
சுடர்க தமிழ் நாடே!

வாழ்க தமிழ் மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழியே!

வானம் அறிந்த தனைத்தும் மறிந்து
வளர்மொழி வாழியவே

**மகாகவி சுப்பிரமணிய பாரதியார்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வித்தியாலய அதிபரின் ஆசிச் செய்தி

வ/ பாவற்குளம் கணேஸ்வரா மகா வித்தியாலயத்திலிருந்து வெளிவரும் ''உயிர்ப்பு'' எனும் இச்சஞ்சிகையானது மாணவர்களிடையே மறைந்து கிடக்கும் ஆற்றல்களை ஆக்கங்களைச் சுமந்து வருகின்றது. உளஆற்றலுக்கு உயிர் கொடுக்கும் "உயிர்ப்பு" எனும் இச்சஞ்சிகை வெளிவர உழைத்த ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரையும் பாராட்டுவதுடன் நவராத்திரி நன்நாளில் வெளியாகும் இச்சஞ்சிகைக்கு எனது ஆசியையும் வாழ்த்தையும் வழங்குவதில் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

நன்றி.

**திரு. ப. சதாசிவம்**
**அதிபர்**
**வ/ பாவற்குளம் கணேஸ்வரா ம.வி.**
**வாரிக்குட்டியூர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் மன்றப் போசகரின் வாழ்த்துச் செய்தி

உயிர்ப்பு சஞ்சிகையின் மீண்டுமொரு மலர்வைக் கண்டு மனம் மகிழ்கின்றேன். எமது மாணவர்களின் உள்ளார்ந்ததிறன்கள் உயிர் பெற்றெழுந்துள்ளன. மொழி விருத்தியும் ஆக்கத்திறன்களும் ஊக்கம் பெற்றிருப்பதை அறிய முடிகின்றது. அதிபரின் வழிகாட்டலில் மலரின் வெளி வருகைக்காக உழைத்த ஆசிரியர்கள்,மாணவ மன்றத்தினர் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி.

**திரு. கோ.கணேஸ்**
**இணைக்கப்பட்ட அதிபர்**
**தமிழ்மன்றப்போசகர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனியொரு விதி செய்வோம்

மனிதன் மனிதனோடு பழகாமல்
துப்பாக்கியோடு
நேசம் வைத்ததால்
துடிக்கின்றனர் இங்கு பலர்

சிகரங்களில் சிறந்து
சிரிக்க வேண்டிய மனிதன்
பனைமரம் வெட்டி
பதுங்கு குழியமைக்கின்றான்

புத்தாடை கட்டிய
மரங்கள் சித்திரைக்கு
வாழ்த்துப் பாடுகின்றன- ஆனால்
மாற்றாடை கூட இல்லாமல்

பல உள்ளங்கள் அகதி முகாம்களில்
உருக்குலைந்து கிடக்கின்றன
துப்பாக்கிகள் - தினம்
மரண கீதம் இசைக்கின்றன

ஷெல் மேளங்கள் - அதற்கு
தப்புத் தாளம் போடுகின்றன
அருவி வெட்டப் பாடல
இசைத்த இம் மண்ணில்

இளவேனில் வந்த தென்றலா
இளங்குயிலே நீ இசைக்கின்றாய்
எங்கள் வாழ்க்கையில் இப்போது
இலையுதிர் காலமல்லவா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவரை நாம் கண்டது வேதனை
இனி செய்வோம் ஒரு சாதனை
இதய பூமியின் ஓட்டைகளுக்கெல்லாம்
கட்டிடுவோம் ஒற்றுமை அணை

கடந்த காலச் சோகங்களைக்
கலைத்து விட்டு
நிகழ் காலத்திற்கான நிதர்சனங்களை
சேகரிப்போம்

துப்பாக்கியும் தோட்டாவும்
பாசம் வைப்பது போல்
தமிழும் முஸ்லீமும் சிங்களமும்
நேசம் வைத்தால் நாட்டு வளம் பெருகிடுமல்லவா

விடியல் ஒன்றினை
வரவு வைப்போம் - அதில்
மானிட மனங்களை
மரியாதை பெற வைப்போம்

எனவே இனியோர்
விதி செய்வோம்
சமாதானக் காற்றினால்
இளைஞர்களை ஒன்று சேர்ப்போம்.

இ.இராஜகரன்
தரம்-13 கலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிரிக்கெட்

| நாடு | தேசிய கிரிக்கெட் அமைப்பின் பெயர் |
|---|---|
| 01. அவுஸ்திரேலியா | கிரிக்கெட் அவுஸ்திரேலியா |
| 02. இலங்கை | ஸ்ரீலங்கா கிரிக்கெட் சபை |
| 03. இந்தியா | இந்தியா கிரிக்கெட் கட்டுப்பாட்டுசபை |
| 04. இங்கிலாந்து | இங்கிலாந்து-வேல்ஸ் கிரிக்கெட்சபை |
| 05. நியூசிலாந்து | நியூசிலாந்து கிரிக்கெட் சபை |
| 06. பாகிஸ்தான் | பாகிஸ்தான் கிரிக்கெட் சபை |
| 07. பங்களாதேஷ் | பங்களாதேஷ் கிரிக்கெட் சபை |
| 09. தென்னாபிரிக்கா | தென்னாபிரிக்க ஐக்கிய கிரிக்கெட்சபை |
| 10. மேற்கிந்தியதீவுகள் | மேற்கிந்தியதீவுகள் கிரிக்கெட்சபை |
| 11. ஸிம்பாப்பே | ஸிம்பாப்பே கிரிக்கெட் யூனியன் |
| 12. கென்யா | கென்ய கிரிக்கெட் சங்கம் |

ந. யாழினி
தரம்-12 (வர்த்தகம்)



# வாழ்த்துகின்றோம்

எமது பாடசாலையில் 2003 க.பொ.த
உயர்தர கலைப் பிரிவில்
பல்கலைக்கழக அனுமதி பெறவுள்ள
செல்வி . ஜெயந்தா சண்முகநாதன்
என்பவரை வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலக நாடுகளின் தலை நகரங்களும் நாணயங்களும்

| நாடு | தலைநகரம் | நாணயம் |
|---|---|---|
| 1. ஐக்கியஅமெரிக்கா | வொஷிங்ரன் | யூ.எஸ்.டொலர் |
| 2. ஐக்கியராச்சியம் | லண்டன் | ஸ்ரெலிங்பவுண் |
| 3. யப்பான் | டோக்கியோ | யென் |
| 4. ஜேர்மனி | பொன் | டொயிஸ்மார்க் |
| 5. சுவிட்சர்லாந்து | பேர்ண் | பிராங் |
| 6. கனடா | ஒட்டாவா | டொலர் |
| 7. அவுஸ்திரேலியா | கன்பெரா | டொலர் |
| 8. சுவீடன் | ஸ்டக்ஹோம் | குரோன் |
| 9. தென்ஆபிரிக்கா | பிரேடோரியா | ருண்ட் |
| 10. சவுதி அரேபியா | ரியாத் | ரியால் |
| 11. ஆர்ஜன்ரீனா | புவனஸ்அயரஸ் | பெசோ |
| 12. மலேசியா | கோலாலம்பூர | டொலர் |
| 13. சீனா | பீஜிங் | யுவான் |
| 14. இந்தியா | புதுடில்லி | ரூபா |
| 15. ஈரான் | தெஹ்ரான் | றியால் |
| 16. ஈராக் | பக்தாத் | டினார் |
| 17. ஆப்கானிஸ்தான் | காபுல் | ஆப்கானி |
| 18. இலங்கை | ஸ்ரீ ஜயவர்தனபுர | ரூபா |
| 19. பாகிஸ்தான் | இஸ்லாமபாத் | ரூபா |
| 20. இத்தாலி | லீமா | லீரா |

இ. கவிதா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகாழ்வாய் தமிழ்மாதே

தென்பொதிகை சந்தனமே
தேன் மதுரத் தமிழ்மொழியே
அன்னை என்னைத் தாலாட்ட
அருள் மொழியாய் ஆனவளே

அழகு நிலா தனைக் காட்டி
அமுதூட்டி வளர்க்கையிலே
பழகு தமிழ் உணர்வுகளை
பாட்டினிலே உணர்ந்தவரின்

வள்ளுவனின் குறள்நடையும்
வளர் கம்பன் கவிநயமும்
துள்ளு தமிழ்க் காவியங்கள்
கொண்டு புகழ் மணம் படைத்தாய்

இயல் இசையும் நாடகமும்
இலக்கணமாய் கொண்டிலங்கி
பயில் நடையில் புதுமெருகி
பாவினிலும் அரவணைத்தாய்

பாரெங்கும் விழாக்கோலம்
பூண்டு உனைப் பாராட்ட
ஊரெங்கும் தமிழ் மணக்கும்
உலகாழ்வாய் தமிழ் மாதே.

ம. சுதர்சினி
தரம் 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வைரஸ் காய்ச்சல்பரவும் விதம்

இது மிகவும்
இலகுவாக பரவும்
நோயாகும். நோய்க்கிருமிகள்
உட்சென்று 24-27 மணித்தியாலயம்
மூக்கிலிருந்து சளி வெளியேறுதல்
தொண்டை அடைத்தல், தொண்டைஅழற்சி
உடல் வருத்தம், தலைவலி போன்றன
அறிகுறிகளாகும். காய்ச்சல் கடுமையாக
இருக்கும் வயிற்றோட்டம், வயிற்றுநோ
வாந்தியும் ஏற்படலாம். இவ்அறிகுறிகள்
நோயாளிகளிடம் இல்லாவிடினும்
வேறுபட்டவிதத்தில் நோய்
உண்டாகும்.

வைரஸ் காய்ச்சல்
ஏனைய தடிமன், காய்ச்சல்
போல சுவாசக்குழாய் ஊடாகவும்
பரவும். ஆகவே நோய்வாய்ப்பட்ட
ஒருவர் இருமும்போதும் தும்மும்போது
வெளியாகும் எச்சில் துளுக்களால்
சுகதேகி ஒருவரின் மூக்கின் ஊடாக
நோய் பரவும். ஆகவே நோய் உள்ள
வர்கள் சுகதேகிகள் இடமிருந்துவிலகி
காரியாலயம் செல்லாது வீட்டில்
தங்கியிருப்பதால் நோயை தடுப்பதற்கு
உதவியாக இருக்கும்.

### தடுப்பு முறைகளும் பரிகாரங்களும்

வைரஸ் காய்ச்சல் ஆரம்பத்திலேயே ஓய்வு எடுப்பது முக்கியமாகும். வளர்ந்தவர்கள் நோயுற்று இருந்தால் தொழிலுக்கு செல்லாது இருப்பதும் மாணவர் பாடசாலை செல்லாதிருப்பதும் நோயைக்குணப்படுத்த உதவும். நோயுள்ளபோது கூடியஅளவு நீராகாரம் எடுப்பது நல்லது விரும்பிய உணவை சிறிதளவு எடுத்து உண்ணவேண்டும். உணவு உண்ணாவிட்டால் நோய் அதிகரிக்கும். இது வைரஸ் நோய் என்பதனால் வைத்தியரின் அனுமதியின்றி மாத்திரை பருக முடியாது.

ப. நிரஞ்சனா
தரம் -12 (கலை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிந்ததும் அறியாததும்.

01. முச்சுடர்கள்: சூரியன், சந்திரன், அக்கினி
02. முத்தமிழ்: இயல், இசை, நாடகம்
03. இசையின் உயிர்கள்: இராகம், தாளம், பல்லவி
04. சங்கங்கள் மூன்று: முதற்சங்கம், இடைச்சங்கம்
05. பாலினங்கள் மூன்று: அறத்துப்பால், காமத்துப்பால், பொருட்பால்
06. யுகங்கள் நான்கு: கிருதயுகம், துவாபரயுகம், திரேதாயுகம், கலியுகம்
07. வர்ணங்கள் நான்கு: பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர்
08. சதுர் வேதங்கள்: இருக்கு, யசுர், சாமம், அதர்வணம்
09. ஐந்து சபைகள்: கனகசபை(சிதம்பரம்), வெள்ளி சபை(மதுரை), ரத்தின சபை(திருவாலங்காடு), சித்திரசபை(திருக்குற்றாலம்), தாமிர சபை(திருநெல்வேலி)
10. பஞ்சவர்ணங்கள்: வெண்மை, கருமை, பொன்மை, பசுமை, செம்மை
11. பஞ்ச கன்னியர்கள்: அகலிகை, திரௌபதி, சீதை, தாரை, மண்டோதரி
12. பஞ்ச ரத்தினங்கள்: வைரம், முத்து, மாணிக்கம், நீலம், மரகதம்
13. பருவங்கள் ஆறு: இளவேனில்- சித்திரை, வைகாசி
    முன்பனி- மார்கழி, தை
    முதுவேனில்- ஆனி, ஆடி
    பின்பனி- மாசி, பங்குனி
    கார்- ஆவணி, புரட்டாதி
    குளிர்- ஐப்பசி, கார்த்திகை
14. அறுசுவைகள்: இனிப்பு, கசப்பு, உப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு
15. ஆறுபடை வீடுகள்: திருப்பரங்குன்றம், திருவாவினன்குடி, பழமுதிர்சோலை, திருத்தணிகை, சுவாமிமலை, திருச்செந்தூர்
16. ஸப்தஸ்வரங்கள்: ஸரிகமபதநி
17. சப்தரிஷிகள்: வசிட்டர், விசுவாமித்திரர், அத்திரி, ஆங்கிரசர், பிரிசி, மௌதகல்யர், கௌதமர்.
18. நாற்படைகள்: ரதம், யானை, குதிரை, காலாள்.
19. உலகப் பொதுமறை: திருக்குறள்.
20. பஞ்சபூதத்தலங்கள்: காஞ்சி, திருவானைக்கா, திருவண்ணாமலை, காளஹஸ்தி, சிதம்பரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐக்கிய நாடுகள் அமையமும் அதன் அங்கங்களும்

01. சரவதேச அணுசக்திக் கழகம் -1957 (I.A.EA)
International Atomic Energy Agency
தலைமையிடம் : அவுஸ்திரேலியா

02. ஐ.நா.கல்வி,அறிவியல்,கலாசாரக் கழகம் -1946 (U.N.E.S.C.O)
United Nations Educational Scientific and Cultural Organisation.
தலைமைபீடம் -பரீஸ்

03. சரவதேச தொழிலாளர் நிறுவனம் -1919 (I.L.O)
International Labour Organisation.
தலைமையிடம் -சுவிற்சலாந்து

04. உணவு மற்றும் விவசாய நிறுவனம். (F.A.O)
Food and Agriculture Organisation
தலைமையிடம் -ரோம்

05. உலக சுகாதார நிறுவனம் -1948 (W.H.O)
World Health Organisation
தலைமையிடம் -சுவிற்சலாந்து

06. சரவதேச நிதி நிறுவனம் -1945 (I.M.F)
International monetary Fund
தலைமையிடம் -அமெரிக்கா

07. சரவதேச வளர்ச்சி வங்கி -1949 (I.B.R.D)
Intrenational Bank for Reconstruction Deveiopment
தலைமையிடம் -அமெரிக்கா

08. சரவதேச வளர்ச்சி அமைப்பு -(I.D.A)
International Development Association
தலைமையிடம் -உலக வங்கி இதை நிரவகித்து வருகிறது.

09. சரவதேச நிதிக் கழகம் -(I.F.C)
International Finance Corporation
தலைமையிடம் -உலக வங்கி இதை நிரவகித்து வருகிறது.

10. சரவதேச விமானப் போக்குவரத்து நிறுவனம் -1944 (I.C.A.O)
International ivil Aviation Organisation
தலைமையிடம் -கனடா

11. சரவதேச தபால் கழகம் -1875 (U.P.U)
Universal Postal Union
தலைமையிடம் -சுவிற்சலாந்து

தொடர்ச்சி-------14



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வர்த்தகத்தின் தோற்றப்பாடு

ஆதி காலத்தில் காடுகளில் தமது வசிப்பிடத்தை அமைத்துக் கொண்டு வாழ்ந்து வந்த எமது மூதாதையர் அவர்களின் அடிப்படைத் தேவைகளாக உணவு, உடை உறையுள் என்பவற்றினையே கொண்டிருந்தனர். இவ் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்காக தமக்குதேவையானவற்றை தாமே உற்பத்தி செய்து தமது தேவைகளை நிறைவுசெய்து கொண்டனர். இது சுயதேவை பூர்த்திமுறை என அழைக்கப்பட்டது.

கால ஓட்டத்தில் சனத்தொகை அதிகரிப்பானது அதிகரித்தன் காரணமாக மனித தேவைகளும் அதிகரித்தது. இதன் காரணமாக சுயதேவை முறையின் மூலம் எல்லாத் தேவைகளையும் நிறைவுசெய்து கொள்ள முடியாமல் போனது. இதனால் அக்கால மனிதன் தனது நுகர்வின் பின் மிகையாக காணப்படுகின்ற பொருட்களை வேற ஒருவருக்கு அவனிடமுள்ள பொருட்களை பரிமாற்றிக் கொண்டான். இது பண்டமாற்றுமுறையென கூறப்படுகின்றது. ஆனாலும் கால ஓட்டத்தின் காரணமாக இதுபல குறைபாடுகளுடையதாக மாறியது. பண்டமாற்றுமுறையில் பின்வரும் குறைபாடுகள் காணப்படுகினது.

1.பண்டங்களை இலகுவாக இடம் நகர்த்தமுடியாமை
2.பண்டங்களை சேமித்து வைப்பது கடினம்
3.பண்டங்களின் அடிப்படை பொருந்துகை இன்மை
4.பண்டங்களின் பெறுமதியை சரியாக் அளவிடமுடியாமை
5.பண்டங்களைதேவைக்கேற்பசிறு அலகுகளாக பிரிக்கமுடியாமை.

**இக்குறைபாடுகளின் காரணமாகவும் மனிதனது தேவைகள் பலமடங்குகளாக அதிகரித்தன் காரணமாக்வும் இப் பண்டமாற்றுமுறை** கைவிடப்பட்டு யானைத்தந்தம், உலோகத்தகடு போன்ற பொருட்கள் கொடுப்பனவு ஊடகங்களாக பயன்படுத்தப்பட்டு பண்டங்கள்சேவைகளின் பரிமாற்றமானது அத்திவாரம் இடப்பட்டது.

இக் கொடுப்பனவு ஊடகமானது பல் வேறுபட்ட குறைபாடுகளைக் கொண்டவையாககாணப் பட்டவையினால் சட்டரீதியான ஏற்பனவுத்தன்மையுள்ளதும் பொதுவான ஏற்பனவுத்தன்மையும் கொண்ட சட்டமைப்பானது அறிமுகப்படுத்தப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணமாக சட்டமுறைப்பணம் தோன்றிய பின்னர் " சுயதேவை உற்பத்தி முறை நீங்கி எஞ்சியது வியாபாரம்" என்ற நிலையாக மாறி ஏனையவர்களின் தேவையினை நோக்கமாகக் கொண்டு தனது நோக்கத்தினை இலாபமாகக் கொண்டும் பொருட்கள் சேவைகள் உற்பத்தி செய்யப்பட்டு வியாபாரம் வளர்ச்சியடைந்து கொண்டு வந்தது. இவ்வாறு வளர்ச்சியடைந்து கொண்டுவரும் போது இவ் வியாபாரத்தின் பல்வேறு காரணிகள் பாதிப்பாக காணப்பட்டது. அதாவது

1 கால தாமதம்
2. சந்தைப்படுத்த முடியாமை
3. பழுதடையும் தன்மை
4. பொருட்களை தூர இடங்களுக்கு இடம் மாற்ற முடியாமை
5. ஊழியர்

என்பவற்றின் தடை காரணமாகவும் இவற்றைநிவர்த்தி செய்யும் வகையிலும் வியாபார துணைச்சேவைகள் அறிமுகப் படுத்தப் பட்டது. போக்குவரத்து, பணவங்கி, களஞ்சியப்படுத்தல், தொடர்பாடல், காப்புறுதி, விளம்பரம் என்பவற்றின் காரணமாக வியாபாரத்தின் தடைகளை நிவர்த்தி செய்யப்பட்டமையினாலும் வர்த்தகம் தோற்றம் பெற்றது. வர்த்தகம் என்பது வியாபாரத்தினையும் வியாபாரத்துணைச் சேவைகளையும் உள்ளடக்கியது ஆகும்.

**வர்த்தகத்தின் வளர்ச்சிப் படம்**

சுயதேவை பூர்த்தி முறை
↓
பண்ட மாற்று முறை
↓
நேரில் உற்பத்தி முறை (பண அறிமுகம்)
↓
வியாபாரம்
↓
துணைச்சேவைகள்
↓
வர்த்தகம்

வி. மைதிலி
தரம்-12



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. சர்வதேச தகவல் தொலைத்தொடர்புக் கழகம் -1934 (I.T.U)
International Telecommunication Union
தலைமையிடம் -சுவிற்சலாந்து

13. உலக வானிலை ஆய்வு நிறுவனம் -1947 (W.M.O)
World Meteorological Organisation
தலைமையிடம் -சுவிற்சலாந்து

14. சர்வதேச கடல் நிறுவனம் -1948 (I.M.O)
International Maritime Organisation
தலைமையிடம் -கனடா

15 உலக அறிவாண்மை நிதிக்கழகம் -1970 (W.I.P.O)
World Intellectual Property Organisation
தலைமையிடம் -சுவிற்சலாந்து

16. சர்வதேச விவசாய அபிவிருத்தி அமைபபு -1977 (I.F.A.D)
International Fund for Agriculture Development

17. உலக வணிக அமைப்பு -1995 (W.T.O)
World Trade Organisation
தலைமையிடம் -சுவிற்சலாந்து

18. ஐ.நா. குழந்தைகள் நல அமைப்பு -(UNICEF)
United Nations International Childrens Educational Fund

19. ஐ.நா.மறு வாழ்வளிப்புப் பணிக்கழகம் -(UNRWA)
United Nations Relief and works Agency

20. ஐ.நா.மக்கள் தொகைச் செயற்பாடு நிதி அமைப்பு-(U.N.F.P.A)
United Nations Fund for Population Activities

21. ஐ.நா.அகதிகள் ஹைகமிஷன் -(UNHER)
United Nations High Commissioner for Refugees
தலைமையிடம் -சுவிற்சலாந்து

22. ஐ.நா. தொழில் வளர்ச்சி நிறுவனம் -(U.N.I.D.O)
United Nations Industrial Development Organisation
தலைமையிடம் -அவுஸ்திரேலியா

23. ஐ.நா.வளரச்சித் திட்டம் -(U.N.D.P)
United Nations Development Program

24. விவசாய மேம்பாட்டிற்கான சரவதேச நிதி உதவி -(IFDA)
international Fund for Agricultural Development
தலைமையிடம் -ரோம்

தொகுப்பு :
கைலாசநாதன்
ஜெயகாந்தன்
ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லிங்கன் கென்னடி [அபூர்வ ஒற்றுமை]

ஒருவருடைய வாழ்க்கையில் நடந்த சம்பவங்கள் சரியாக 100 வருடங்களுக்குப் பின்னர் அதே துறையிலிருந்த இன்னொருவருடைய வாழ்க்கையில் பல ஒற்றுமைகளுடன் நடந்திருக்கின்றன. முன்னாள் அமெரிக்க ஜனாதிபதிகளான ஆபிரகாம் லிங்கன், ஜோன் கென்னடி ஆகியவர்களின் வாழ்க்கையில் தான் இந்த அபூர்வ ஒற்றுமை காணப்படுகின்றது. 1860 இல் ஆபிரகாம் லிங்கன் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். சரியாக 100 வருடங்களின் பின்னர் 1960 இல் ஜோன் கென்னடி ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். லிங்கனின் உதவிப் பெயர் கென்னடி ஆகும்.

கென்னடியின் உதவிப் பெயர் லிங்கன் ஆகும். இரண்டு ஜனாதிபதிகளும் கொல்லப்பட்டனர். இருவரும் இறக்கும் போது அவர்களது மனைவியர்கள் அருகில் இருந்தனர். இருவரும் இறந்தது வெள்ளிக்கிழமையில். லிங்கனைத்தியேட்டர் ஒன்றிலிருந்து கொன்றவன் களஞ்சிய சாலை ஒன்றிலிருந்து பிடிபட்டான். கென்னடியைச் சுட்டவன் தியேட்டர் ஒன்றிலிருந்துபிடிபட்டான். இரண்டு கொலையாளிகளின் பெயர்களும் 15 எழுத்துக்கள் கொண்டவையாகும்.

விசாரணைக்கு வரும் முன்னரே இரு கொலையாளிகளும் இறந்தனர். லிங்கனுக்குப் பிறகு ஜனாதிபதியாக இருந்தவர் ஆண்ட் ரு ஜோன்ஸன். கென்னடிக்குப் பிறகு ஜனாதிபதியாக இருந்தவர் லிண்டன் ஜோன்ஸன். ஆண்ட் ரு ஜோன்ஸன் பிறந்தது 1808இல். லிண்டன் ஜோன்ஸன் பிறந்தது ஆண்ட்ரு ஜோன்ஸன் பிறந்து 100 வருடங்களின் பின் அதாவது 1908இல். இரண்டு ஜோன்ஸன்களின் பெயரையும் ஆங்கிலத்தில் எழுதி வாசித்தால் கிடைப்பது 13 எழுத்துக்கள்.

தொகுப்பு: கை. காந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுவர் துஸ்பிரயோகத்திற்கு முடிவு எம்கையில்

விசேட கவனிப்பையும் உதவியையும் பெற வேண்டிய பருவம் பிள்ளைப்பருவமாகும். தங்கள் பிள்ளைகளுக்கு அன்பைப் பொழிந்து பாதுகாப்பதற்கு பதிலாக கண்ணிருந்தும் குருடாக பெற்றோரேகண்டு கொள்ளாமல் விடுவதனாலேயே இவர்களின் ஒழுக்கம் தறிகெட்டு போகின்றது.

இவ்வாறு ஒழுக்கயீனமாகும் சிறார்களைப் பார்த்து சீர்குலைந்த இந்தச்சமுதாயமே இதற்கு காரணமென்று கூறுவது நொண்டிச் சாட்டாகும். மேலதிக வருமானத்திற்காக தங்கள் குழந்தைகளின் படிப்பை இடைநிறுத்தி தகாத பிழைப்பை நடத்த தூண்டும் பெற்றோர்களுமிருக்கின்றார்கள்.இத் தொழிலில் இறங்கிய சிறுககள் அடிக்கடி குற்றச்செயலிலும் போதைப்பொருள் துஸ்பிரயோகத்திலும் ஈடுபடுகின்றனர்

இந்த பயங்கர நிலமைக்கு கொண்டு போய் விடுவது எது? பணம் கொழிக்கச் செய்வதன் காரணமாகஇந்நிலமை சகித்து கொள்ளப்படினும் இந்த பரிதாபகரமான வாழ்கையிலிருந்து தப்ப எந்தவொரு நம்பிக்கையுமின்றி வாழ்க்கையில் விரக்தியடைந்து எதற்குமே லாயக்கற்றவர்களாய் உருவாகும் சிறார்களைபற்றி ஒரு கணம் சிந்தித்து பாருங்களேன்.

நெஞ்சை உறைய வைக்கும் இத்தகையகொடிய நிஜங்களை தெரிந்தும் ஏன் அநேகர் சகித்து கொள்கிறார்கள்.? ஏன் ஊக்குவிக்கிறார்கள். பிள்ளையின் ஆளுமை முழுமையாக வளர்ச்சியடைவதற்கு மகிழ்ச்சியும் அரவணைப்பும், புரிந்துணர்வும் உடைய ஒரு நிறைந்த குடும்பச்சூழல் தேவை என்பதை நாம்உணரத் தவறும் வரை இத் துஸ்பிரயோகத்துக்கான முடிவு கண்ணுக்கெட்டாத்தூரந்தான் என்பதை உணர்ந்து இந்த காட்டுமிராண்டித்தனமான செயலைச் சிறைப்படுத்த உயர்ந்த உள்ளங்கொண்டவர்களாக நாம் வாழ்ந்தோமானால் இந்நிலமைக்கான முடிவு எம்கையில்

ஆக்கம்:
வி. மணிமொழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணிதம் கற்றல் -கற்பித்தலில் காணும் இடர்கள்.

கணிதபாடம் ஓர் இலகுவான பாடமாக இருந்த போதிலும் காலாகால மாக காணப்பட்டுவரும் குறைபாடுகள் காரணமாக இப்பாடத்தில் மாண வர்கள் உரிய தேர்ச்சிகளை அடைந்து கொள்ள முடியாதவர்களாகக் காணப்படுகிறார்கள்.

இக்குறைபாடு நகரப்புறப் பாடசாலைகளாக இருந்தாலென்ன கிராமப்புறப் பாடசாலைகளாக இருந்தாலென்ன பொதுவான பிரச்சினையாகக் காணப்படுகின்றது. நகரப்புறப் பாடசாலைகளைப் பொறுத்த வரையில் தனியாகப் பாடசாலைகளில் மட்டும் கற்றல் சந்தர்ப்பங்களைப் பெறுகிறார்கள் என்று கூற முடியாது. அவர்கள் தனியார் கல்வி நிலையங்களிலும் தனிப்பட்ட (Personal class) வகுப்பு முறைகளையும் கற்றல் சந்தர்ப்பங்களைப் பெற்றுக் கொள்கிறார்கள். இருந்தும் கூட மெல்லக் கற்கும் அல்லது கற்றலில் சற்று இடர்படும் மாணவர்கள் உரிய தேர்ச்சியை எட்ட முடியாதவர்களாக இருக்கிறார்கள்.

இந்த நிலையில் கிராமப்புற மாணவர்களைப் பொறுத்த வரையில் இந்நிலை மிகவும் மோசமாகக் காணப்படுகிறது. அவர்களுக்குப் பாடசாலை ஊடாக மட்டுமே கற்றலுக்குரிய சந்தர்ப்பங்கள் கிடைக்கிறது. பொதுவாகக் கற்றல் கற்பித்தலில் தொடர்ந்து காணப்பட்டு வரும் பிரச்சினைகளில் இருந்து கணிதபாட நிலையைப் பற்றிச் சற்று வேறுபடுத்தி ஆராய முற்படுகையில் சிறப்பாகச் சில பிரச்சினைகளையும் அவற்றுக்கான தீர்வு முயற்சிகளையும் ஆராய்வோம்.

(1) ஆரம்ப வகுப்புகளில் அடிப்படைக் கணித எண்ணக் கருக்களில் உரிய தேர்ச்சிகளைப் பெற்றுக் கொள்ளாமை

(2) அட்சர கணிதத்தில் உள்ள நேர்,மறை குறிகள் ,x,y போன்ற தெரியாக் கணியங்களின் பயன்பாட்டில் உள்ள மயக்க நிலைகள்.

(3) கேத்திர கணித உருக்கள்,பரிமாண நிலைகள் பற்றிய சரியான அகக்காட்சி ஏற்படுத்தப்படாமை

(4) கணித செய்கைகளின் போது ஏற்படும் இடர்பாடுகள் அல்லது மயக்க நிலைகளை உடனுக்குடன் குறிப்பாக வீடுகளில் இவற்றைத் தீர்த்துக் கொள்ள இயலாமல் இருத்தல்.

(5) கணித செய்கைகளின் போது முன்னறிவு தொடர்ச்சியாகத் தேவைப்படல்.

இவ்வாறான பிரச்சினைகளுக்கு உபகரணக் கற்பித்தல்,செய்கைக் கற்றல் போன்றவை பொதுவான தீர்வாக அமையும்.

ஆரம்ப வகுப்புகளில் +,- என்பன கூட்டல்,கழித்தல் என்ற கணித செய்கைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டு இடைநிலை வகுப்புகளில் திசை கொண்ட எண்கள் என்ற வகையில் நேர்குறி,மறைகுறி என்பவற்றையும் அறிமுகப்படுத்தும் போது மாணவர்கள் சற்றுத் தடுமாற்றத்துக்கு உட்படு கிறார்கள்.

தொடர்ச்சி.......18ம் பக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

x+y
கூட்ட முடியாது

x×y = xy
பெருக்குக

$x^2+x$
கூட்ட முடியாது

$x^2 \times x = x^3$
பெருக்குக

(-3)+(-7) = (-10)
அல்லது
-3 -7 = (-10)


(-3) x -7 = +21

(-3) +7 = +4


(-3) x7 = (-21)

மேலுள்ள கணிதச் செய்கைகளில் பொதுவாக அநேக மாணவர்கள் குழப்பத்திற்கு உள்ளாகிறார்கள். அடுத்து க்ஷேத்திரகணித தள உருக்கள், கனஉருக்கள் தொடர்பான கணிதச் செய்கைகள்.

**தள உருக்கள்**



**கன உருக்கள்**



க்ஷேத்திர கணிதத்தைக் கற்பிக்கும் போது உருக்கள் அல்லது பொருத்தமான உபகரணங்களைப் பயன்படுத்துகையில் மாணவர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளை இலகுவாகத் தீர்த்துக் கொள்ள முடிவதை அனுபவம் மூலம் காணக்கூடியதாக இருக்கிறது. அடுத்து அடிப்படைக்கணிதச் செய்கைகளான பெருக்கல், பிரித்தல் என்பவற்றுக்காக மாணவர்கள் வாய்பாடு (பெருக்கல் அட்டவணை) அட்டவணையை மனனம் செய்யாது மேல் வகுப்புகளில் கூட அட்டவணையைப் புரட்டிப் பார்க்கும் நிலைமை காணப்படுகிறது. இவற்றால் அட்சரகணிதப் பிரதியீடு, சமன்பாட்டுத் தீர்வு போன்றவற்றில் பிரச்சினைகளை எதிர் நோக்க வேண்டி ஏற்படுகின்றது. பிரதியீடு சரியாகச் செய்ய முடியாத மாணவர்கள் "வரைபு" போன்ற இலகுவான பாடப்பரப்புகளில் கூட முழுமையான புள்ளிகளைப்பெற முடிவதில்லை.

திரு. செல்லத்துரை-வேதநாதன்.
(பயிற்றப்பட்ட கணித ஆசிரியர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நட்பை நாடிய நல்ல நண்பர்கள்

வாழ்க்கையிலே நாம் பெறுகின்ற நற்பேறுகளுள் நல்ல நட்பைப் பெறுதலும் ஒரு சிறந்த பேறாகும். ஆபத்து வரும்போது நமக்குஉதவுபவனே சிறந்த நண்பனாவான். இவ்வாறே சிறந்த நூல்களும் எமக்கு உதவி புரியும்நண்பர்களாகும்.

" மலர்கள் எல்லாம் தாமரை மலர்கள் ஆவதில்லை" இதேபோன்றே எல்லா நூல்களும் சிறந்த நூல்களாகி விடுவதில்லை. அதுவும்இந்நூற்றாண்டிலேயே பல கவர்ச்சியான நூல்கள்வெளியிடப்படுகின்றன.

அதாவது நாம் இந்த நூல்களைக் கற்கும் போதுஅது குளிக்கப் போய் சேறு பூசின கதையாகிவிடும். "பாலும் நீரும் சேர்ந்து காணப்படும் போதுஅன்னம்" அதைப் பார்த்து நீரைத் தவிர்த்து பாலை மட்டும் பருகிவிடும்.அதைப்போன்றே நாமும் நூல்கள் பல்லாயிரம் காணப்படினும் அவற்றுள்ளே எது சிறந்தது நம் வாழ்க்கைக்கு உதவக்கூடியது எது என்று தெரிவு செய்துகற்றுக்கொள்ள வேண்டும். அதுவே நம் வாழ்க்கைக்கு உதவக்கூடியது ஆகும். கூடாத நூல்களைக் கற்கும் போது அது நமது நீண்டகால வாழ்க்கைக்கு பாதிப்பை ஏற்படுத்தும் ஓர் காரணியாக அமையும்.

ஒரு சிறந்த நூல் நமது நல்ல சிந்தனையை வளர்ச்சியை தூண்ட வைக்கும் தன்மை வாய்ந்ததாகும். படிப்போரின் உள்ளத்தை தூண்டிவிடும் தன்மை வாய்ந்ததாகும்.நமக்கு ஓர் நெருக்கடி வரும் போது நாம் ஒரு நல்ல நூலைக் கற்று அறிவைப் பெற்றுக்கொள்ள வாய்ப்பளிக்கும். நமது மனதில் ஒரு சஞ்சலம் வரும் போது நல்ல நூல்களைக் கற்கும் போது அது நமது மனதை சாந்திப்படுத்துவதாக அமையும்.

சில நூல்கள் நாம் வாசித்து சுவைக்கக்கூடியதாகவும் சிறிது ஆசை ஊட்டுவதாகவும் அமைந்திருக்கும்.. அதாவது சிறுகதை, கவிதை போன்றன சுவைக்கத்தக்கதாய் இருக்கும்.நமக்கு நமது நண்பர்கள் எவ்வாறு உதவி புரிகின்றார்களோ அப்படி எமக்கு கல்வியின் சில செய்திகள் தெரியாமல் போகும்போது நாம் நல்ல நூல்களை கற்கும் போது அது நமக்கு பல உதவிகளையும் புரிந்து நமக்கு நல்ல நல்ல சிந்தனைகளை நல்ல வாழ்வு போன்றனவற்றையும் உண்டாக்கிறது.

ஆக்கம்
சி.டிசாந்தினி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகத்தில் வேதனை பொங்க சோர்ந்துபொய் வீட்டுக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்தான் ராமு. அவன் என்றுமே இப்படி சோகமாக வீட்டுக்கு வந்ததில்லை. வீட்டுத திண்ணையிலே வெற்றிலை மென்று கொண்டிருந்த சின்னையாக் கிழவனுக்கு அவனின் போக்கு வித்தியாசமாகப்பட்டது. " டேய் ராமு என்னடா ஒரு மாதிரி இருக்கிறாய் உடம்பு சுகமில்லையே " என்று அன்போடு கேட்டார். " அப்பு" என்று சொன்னவன் நாதழுதழுக்க கண்ணீர் விட்டு அழுதான். அப்பு என்னால தாங்க முடியேல்ல இன்டைக்கு அடையாள அட்டைபோம் நிரப்புறதுக்காக விதானையாரிட்ட போனேன். போமை அவர நிரப்பிப் போட்டு கையெழுத்து வைக்கச் சொன்னவர். என்னால.... என்னால......: வைக்க முடியேல்லை என்று சொல்லி விட்டு மீண்டும் அழுதான்.கிழவர நீண்ட பெருமூசசொன்றை

வெளிவிட்டார்.அவரால்தான் என்ன செய்ய முடியும். ராமுவின் சின்ன வயதிலேயே ஒரு விபத்தில அவனது பெற்றோர் இறந்து போய்விட இந்தத தள்ளாத வயதிலும அவனுக்காக வாழ்து கொண்டிருக்கிறார்.

ஆனாலும அவனை பள்ளிக்கு அனுப்பாமல் விட்டது எவ்வளவு பெரிய தவறு என இப்போது அவருக்கு புரிந்தது. " ராமு கவலைப்படாதடா இந்தக் கிழவன் உன்னை வளர்க்கிறதுக்கு காட்டின அக்கறை உன்னை நாலெழுத்து படிக்கிறதில காட்டேல்ல இல்லாட்டி நீ இப்பிடி அவமானப்பட்டு வந்திருக்கத்தேவையில்லை" கிழவர் ராமுவை ஆதரவாக தடவினார். " அப்புஒரு கிழமைக்க கையெழுத்து வைச்சுப் பழகிக் கொண்டுவரச் சொன்னவர் விதானையார். நான் ஆரட்டையன் எழுத்துப் படிக்கிறது?அப்புஎதுவும் பேசாமல் வானத்தைப் பார்ததார்.

ராமு தனது நண்பனான அருணைப் பார்க்கச் சென்றான். எப்படியும் அவன் தனக்கு கையெழுத்து வைக்கப் பழக்கி விடுவான்என்ற நம்பிக்கையோடு அவன் வீட்டுக் கதவைத்தட்டினான். அருண் வேண்டா வெறுப்போடு கதவைத் திறந்தான். என்னடா ராமு என்னவிசயம என்றான். அதுவந்து..... எனக்கு..... கையெழுத்து வைக்கப் பழகக்கி விடுவியே! என்றான். ராமு ஆவலோடு அத்தோடு தனது இக்கட்டான நிலையையும் அவனுக்குக் கூறினான். அருண் யோசித்து விட்டு ராமு எனக்கு இப்ப நேரமில்லையடா வாற மாசம் ஓ.எல் சோதினை வருகுது.இப்பமினக்கிடேலாது. என்னை மன்னிச்சிடடா. என்றான் முகத்தை திருப்பியவாறே. ராமுவுக்கு ஏமாற்றமும் துக்கமும் நெஞ்சை அடைததது. எழுந்து வெளியே வீதியோரமாக சென்று கொண்டிருந்தான். அப்போதுதான் அவனுக்கு ஒரு விபத்தில் தான் இரததம் கொடுதத காப்பாற்றிய ராஜன் நினைவுக்குவந்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனை சந்திப்பதற்காக நீண்ட மாடிப்படிகளில் ஏறி கதவைத் தட்டினான்.ஒரு தடித்த மீசையோடு ஒருவர் கதவைத் திறந்தார். வந்து....ராஜன் நிற்கிறாரோ...... என்றான் ராமுபணிவாக ''இல்லை'' என்ற பதிலோடு கதவு சாத்தப்பட்டது.ராமுவுக்கு அழுகை வந்துவிடும் போல்இருந்தது திரும்ப முற்பட்ட அவனுக்கு உள்ளே கேட்ட சத்தம்நிற்க வைத்துவிட்டது."டேய்ராஜன் உனக்கு எத்தனை முறை சொல்லுறது படிப்பறிவில்லாத உந்த ஏழையளோட தொடர்பு வைக்கக் கொள்ளக் கூடாதென்று இப்ப பார் அவன் வீடு தேடி வந்திட்டான்

. இதுதான் கடைசியாக இருக்கட்டும்" அதற்கு மேல் ராமுவால் நிற்க முடியவில்லை தாங்க முடியாத அவமானத்துடன் வீட்டுக் வந்தான்.இரண்டு நாட்கள் ஓடி விட்டன.ஒரு பென்சிலால் வெள்ளைத் தாளில் கிறுக்கிக் கொண்டிருந்தான்.கோடுகள் மட்டும் வந்தன. ஆனால் எழுத்து வரவில்லை. அப்புவின் முகத்தைக்கூட அவனால் பார்க்க முடியவில்லை. இப்போது அவனின் உள்ளத்தில் ஒர் வெறி. எப்படியாவது கையெழுத்து வைக்கப் பழகிவிட வேண்டும். தான் நம்பிச் சென்றவர்கள்

கைவிட்டுவிட்டதை அவனால் நம்பமுடியவில்லை. இப்போது யார் அவனுக்கு உதவுவார்கள்? ராமு என்னடா எழுதப் பழகிட்டியே! கிழவர் ஆவலுடன் கேட்டார்.இல்லை அப்பு வேதனையுடன் கூறினான் ராமு. நடந்தவைகள் ஒன்றுவிடாமல்கூறினான். கிழவர் எல்லாவற்றையும் கேட்டுவிட்டு டேய் ராசா நீ யோசிக்காதை உனக்கு நான் பழக்கி விடுறன் என்றார். ராமுவுக்கு சந்தோசம் தாங்க முடியவில்லை.

ஓடிப்போய் ஒரு சிலேட்டையும் ஒரு பென்சிலையும் கொண்டு வந்தான். அப்பு கீழே அமர்ந்து அவனது பெயரை எழுதிக் கொடுத்தார். ஆசையோடு அவன் அதனை எழுத முயன்றான். வளைவுகளும் நெளிவுகளும் அவனுக்கு வரவில்லை. வெறும் கோழிக்கிறுக்கல்களாகவே இருந்தன.கடவுளே நான் எழுத முடியாதா? ராமுவுக்க துக்கம் தொண்டையை அடைத்தது. ஒருநாள்முழுவதும் சிலேட்டில் கிறுக்கிக் கொண்டிருந்தான். எழுத்து வரவேயில்லை. உண்மையில் ராமு சோர்ந்தே போனான்.கண்களில் கண்ணீர முட்டி கன்னத்திலே வழிந்தது.

தொடர்ச்சி-22 ம் பக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராமு..... ஏனடா அழுகிறாய்?..... இந்த அப்பு இருக்கும் மட்டும் நீ அழக்கூடாது. கிழவர் ராமுவின் அருகில் அமர்ந்து கொண்டார். அவனின் கையைப் பிடித்து ஒவ்வொரு எழுத்தாக எழுதிப் பழக்கினார். இப்போது ராமுவால் மகிழ்ச்சியை அடக்க முடியவில்லை. ஒவ்வொரு எழுத்தையும் பார்க்கும் போது அவனுக்குச் சநதோசம் பொங்கியது. எழுத்துக்களை அழித்துவிட்டு தானாக எழுதிப் பார்த்தான். திரும்பத் திரும்ப வெறி பிடித்தவன் போல் எழுதிக் கொண்டிருந்தான். எழுத எழுத கையெழுத்து அழகாகிக் கொண்டு வந்தது.முத்துமுத்தாக அழகாக ராமு...என அவனால் இபபோது கையெழுத்து இட முடிந்தது. ராமு இப்போது

மகிழ்ச்சியின் எல்லையில் வானத்தில் பறந்தான். இரண்டு மூன்று கரித்துண்டுகளை எடுத்துக் கொண்டு மதில் சுவரில் ஒரு இடமும் விடாமல் ராமு.... ராமு......என எழுதிக் கொண்டிருந்தான்.அவன் நினைத்தது நடந்து விட்டது.அவனால் இனி அழகாக கையெழுத்து வைக்க முடியும். இனி யாருக்கும் முன் அவன் அவமானப்பட்டு நிற்கப்போவதில்லை. கண்களில் நீர தழும்ப அவனைப் பெருமித்தோடு பார்த்துக் கொண்டிருந்தார்.சின்னையாக் கிழவர்.

திரு. ச. விஜயகுமார்
ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெள்ளை என்பது..........

இரண்டு வெள்ளைப் புறாக்கள
கால்களில் ஒலிவ் மரக்கிளைகள்
இவைதான் சமாதான முத்திரைகள்
வெள்ளைக் கொடியும்
விருப்பத்தின் சின்னமும்
......... எமது மண்ணில்...........

வெள்ளைப புறாக்கள்
குண்டுகளினால்
விரட்டப்பட்டு வெகுகாலம்
அததி பூக்தாற்போல
அவ்வப்போது சில
வெள்ளைப புறாக்கள்
வந்து சேர்ந்தாலும்
குண்டுச் சத்தங்களால்-அவை
குருதி உறைந்து செததுவிடும்

ஒலிவ மரக்கிளைகள்
ஓங்கி அடிக்க மட்டுமே
இன்று உபயோகம்
வெள்ளை- சமாதானத்திற்கு
மட்டுமா முத்திரை
வெள்ளை..............
எங்கள் மண்ணில்
விதவையின் சின்னமாய்
மாறிய சோகம்

முகமில்லா மனிதரை விட
இதயமில்லா ரோபோககள் அதிகம்
சமாதானப் பிரியரை விட
பிணமுண்ணும் கழுகுகள் அதிகம்
மணம் வீசும் மலரகளைவிட
பிண வாடைவீசும் பூக்கள் அதிகம்
கடலில் நதி கலப்பதை விடவும்
மனிதகுருதி கலபபது அதிகம்
பயிரை காபபது வேலியின் கடமை
வேலியே பயிரை மேயுது இஙகு

ஏ............. மனிதா..................
இன்பத்தில சுவை
தெரிந்திருந்ததால தான்
துன்பத்தின் கொடுமை
புரியும் உனக்கு

வெள்ளை என்பது
விதவையின் சின்னமா
பேசா மௌனியின்
பொககிசமா அது......
இன்பச சுரங்கம்
மலரச செடிக்கு
குருதி ஊற்றாது
நீரைச சொரிந்து
நிம்மதி தேடு
போதும் உந்தன
போரகுணம் இஙகு

வெள்ளை................
விதவையின் சின்னம்
என்பதை மாற்று
கொள்ளை இன்பம்
குலவி மகிழ்ந்திடும்
இன்பச சுரங்கம்.....
ஆதலால்........
வெள்ளை புறாககளை
வானில் வரச செய்.

ம.சுதாகரன்
தரம்:13(2004)கலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுயமிழந்த நினைவுகள்

மெல்லிய சாரல்கள் மண்ணை முத்தமிட்டுக் கொண்டிருந்தன. இடையிடையே சில்லென்ற தென்றலின் சாகசம் பூக்களின் நறுமணத்தை கள்ளத்தனமாக திருடிக்கொண்டிருந்தது. பூவுலகு தானும் புதுப் பொலிவுடன்புனிதமாய் இருந்தது. கட்டாந்தரையில் காலவாசிப்பாயை நிலைக்குத்தாகவிரித்தபடி பஞ்சணை சுகம் கண்டுகொண்டிருந்தது அந்த ஜீவன்.

ஓராண்டு காலமாக தூக்கத்தை தொலைத்த அவன்அன்று தான் ஆழ்ந்த நிம்மதியில புரண்டுகொண்டிருக்கின்றான். ஆதவன் எதிர்காலத்தின் விடியலை எண்ணிய படியே அந்த ஓலைக்குடிலின் முகட்டில் தன் பார்வைக் கதிர்களைப் பரவி விட்டிருந்தான்

ஒரு பத்தடி அகலம் 10 அடி நீளமான பழந்துணி கொண்டு மறைவிடப்பட்ட பவ்யமான குடிசை. அந்தரத்தில் ஊசலாடும் சின்னஞ்சிறு அலக்குகள் ஆங்காங்கே அரைவாசியாய எட்டிப்பார்த்த வண்ணம் இருந்தன. கூரையில் ஆகாயச்சந்திரன் உதித்தாற்போல் ஆங்காங்கே துவாரங்களுள் தத்துவம் போதித்த வண்ணம் இருந்தன. நினைவெல்லாம் சில கனம் அவன் எண்ணங்களில் தவழ்ந்தாலும் நிலையற்ற எதையும் எண்ணி வேதனைப் படுவது பலனில்லை என எண்ணினானோ என்னவோ அம்மாவின் அன்பான குரலுக்கு பதில்க்குரல் கொடுக்கத்தவறவில்லை.

தாயின் பாசக்குரலைக் கேட்ட திசையைநோக்கி நடந்தான். பள்ளம் மேடுகள் பதித்த பாதை ஒவ்வொர் ஓரங்களும் அவன் கண்களுக்கும் கரைபடிந்த காகிதமாக மங்கலாய் தென்பட்டன. உள்ளம் ஒருநிலையில் ஒன்றை மட்டும் எண்ணவில்லை. அடிமனதில் ஆழமாய் பதிந்த இறந்த கால நிஜமான நினைவுகள் தொண்டைக்குழிவரை வந்து அடைபட்டன மீட்ட எண்ணம் கொண்டவனாக மீட்டிப்பார்க்கிறான் அவன் நினைவலைகளில்........................

அவன் பெயர் திவ்யன். அன்பான அம்மா நிலா. பாசத்துடன் அப்பா சேகா. இருவரினதும் ஏக புத்திரன் இவன். அப்பா போராளியாகவே மண்ணில் புதையுண்டார். தாயின் அரவணைப்பில் தான் திவ்யன் இதுவரை இருந்தான். பள்ளிப்படிப்பினில் புள்ளியாய் தொடர்ந்து கொண்டிருந்தவன் சாதாரணதரத்தில் காலடிவைத்தபோதுதான் அம்மாவின் பிரியாவிடை அவனை கதிகலங்க வைத்தது. அடியற்ற மரமாக சாய்ந்தவன் ஆறுநாட்களின்பின் மருத்துவ மனையில் கண்விழித்தான். ஆதரவிற்கு அயலவர்கள் மட்டும்தான். நிலை பரிதாபமாகவே அவனையே அவனால் நம்பமுடியவில்லை

தொடர்ச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்குப் பின்புதான் பள்ளிக்கு சென்றபோது அவளின் பார்வைக்கு இரையானான். சுரேக்கா அவன் அவளின் அவலம் புரிந்தவள் தந்தையற்ற அவள் திவ்யனுடன் நெருக்கம் கொண்டாள். உறவென்பது பூச்சியமாக தென்பட்ட திவ்யனுக்கு அவளின் உறவு ஓராயிரம் உறவுகளுடன் சேர்ந்திருக்கும் உணர்வை அளித்தது. கல்வியில் கூட இருவரும் போட்டி போட்டுக் கொண்டு இருந்தனர். கல்வியில் ஏற்பட்ட மோதல் இருவரிடம் காதலாக மலர்ந்தது. நாட்கள் நகர்ந்தன. திவ்வியன், சுரேக்கா காதலில் காட்டிய ஆர்வத்தைவிட கல்வியில் அதிக கவனம் காட்டினர்.சாதாரண தரம் இருவருக்கும் தேனாக இனித்தது. எதிர்கால வசந்தத்தை எண்ணியபடியே மூன்று மாத கால பிரிவை பரீட்சையில் எதிர்நோக்கினர்.

அப்போதுதான் திவ்வியனுக்கு அந்த பேரிடி தலையில் இறங்கியது. சுரேக்கா தன் மாமாவின் மகனை மணந்து கொண்டு வெளிநாடு சென்றதை பத்திரிகையின் விளம்பரத்தின் மூலம் அறிந்து கொண்டான் உலகமே இருண்டது. அவனுக்கு அதன் பின்னர் ஒளியையே கண்டதில்லை கால்கள் வைக்கும் பாதையெல்லாம் வலித்தது அவனுக்கு. உறவென்பத பிரிவிற்குதான் என எண்ணி அவன் மனசாட்சி மட்டும் அடிக்கடி மனனஞ் செய்து கொண்டிருந்தது.

அன்னையின் அன்பிற்கு அடிமைப்பட்டு அவளை இழந்த பின்னும் உறவென எதுவென்று புரிய வைத்தவளையும் இழந்த பின்னும் தன் சுயநினைவையும் இழந்து வாழுகின்றான். யாருக்காக? கனவில் வரும் தாயின் குரலைத் தினம் கேட்டு கல்லறையை முத்தமிட்டு கொண்டிருப்பதற்காக.

சி.வனிதமலர்
தரம்-12 வர்த்தகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிலத்தின் விடியல்.

வண்டு வந்து மாதலுடன்
தேனெடுக்கும் பூவிலே
தொண்டு செய்யும்
அலை கடலிலே
பெண்டிர் எல்லாம்
சுதந்திரம் பெற்றதிந்த ஈழத்திலே.

எங்கிருந்தோ வந்து
எம் நிலத்தை ஆழ்வதும்மேன்
எம் வளத்தை
அழிப்பதோடு அபகரிப்பதும்மேன்
உம் வீடு நீர் சென்றால்
எம் வீடு எமக்காகும்

இனத்தின் விடுதலைக்காய்
ஒருவன் தேரிருந்தால்
வடத்தை பிடிக்க
வருகையாய் வாரீரோ
முழுமனதாய் கலந்து கொண்டு
முழங்கிடுவீர் சங்கெனவே.

பேர் அணியாய் நீ திரண்டு
போர் எதுவும் புரிய வேண்டாம்
கார் இருளில் நின்று கொண்டு
கதிரவனைத் தேட வேண்டாம்
தமிழா, வாய்திறந்து சொல் ஒருவார்த்தை
எம் நிலமே எமக்கு வேண்டும்.

மோகனதாஸ் சந்திரமோகன்
2004 கலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது பாடசாலை

எனது பாடசாலையின் பெயர வ/பாவற்குளம் கனேஸ்வரா மகாவித்தியாலயம். இப்பாடசாலை 1957ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. தற்போது இப்பாடசாலை அதிபர் ப. சதாசிவம் இங்கு தரம் 1 தொடக்கம் 13 வரையான வகுப்புகளும் இங்கு 22 இற்கு மேற்பட்ட ஆசான்களும் கல்விகற்பிக்கின்றனர். 400க்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி பயிலுகின்றனர்.

எனது பாடசாலையில் பரிசளிப்பு விழா, நவராத்திர விழா, விளையாட்டுப்போட்டி, தமிழ்த்தினப்போட்டி போன்ற நிகழ்வுகள் வெகுசிறப்பாக கொண்டாடப்படுகின்றன. இங்கு பாரதி,கம்பன், வள்ளுவன் போன்ற விளையாட்டு இல்லங்களும் உண்டு. இப்பாடசாலை கிராமத்தில் உள்ளவர்களுக்கு கல்வியறிவை ஊட்டி வருகின்றது எனவே நான் எனது பாடசாலைக்கு எப்போதும் விசுவாசம் கொண்டவளாய் இருப்பேன். இந்தக் கல்லூரித் தாயை என்றும் மறவேன்.

சி.மதிவதனி
தரம்-07

கோட்ட மட்டத்தில் 2002ம் ஆண்டு க.பொ.த
சாதாரண தரப் பெறுபேறுகளில் முதலாம் இடம்
கனேஸ்வரா மகா வித்தியாலயம்
சிறந்த பெறுபேறுகளைப் பெற்றவர்
செல்வி . சி. [illegible]

கோட்ட மட்டத்தில் 2003ம் ஆண்டு க.பொ.த
உயர் தரப் பெறுபேறுகளில் இரண்டாம் இடம்
கனேஸ்வரா மகா வித்தியாலயம்
சிறந்த பெறுபேறுகளைப் பெற்றவர்
செல்வி . ச. ஜெயந்தா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிவியல் உண்மைகள்

01. மூலக்கூறு என்றால் என்ன?
ஒரு பொருளின் எல்லாவிதக் குணங்களையும் பெற்ற மிகமிகச் சிறிய துகள்தான் மூலக்கூறு எனப்படுகின்றது.

02. குதிரைத்திறன் என்றால் என்ன?
நீராவி இயந்திரம் கண்டுபிடிக்கப்படுவதற்கு முன் குதிரைகளே பெரும்பாலும் வேலைகளைச் செய்து வந்தன. ஜேம்ஸ்வாட் நீராவி இயந்திரத்தைக் கண்டுபிடித்த பின் அந்த இயந்திரமானது எத்தனை குதிரைகளின் வேலைத்திறனுக்குச் சமமானது எனவும் கண்டுபிடித்து அதனைக் குதிரைத்திறன் (Horse Power) என்று குறிப்பிட்டார்.

03. விண்கற்கள் என்றால் என்ன?
விண்ணில் வாயு மண்டலத்தில் இருந்து எரிந்து கொண்டே பூமியை நோக்கி இறங்கும் எரி நட்சத்திரங்கள் (துகள்கள்) பூமியை அடைவதற்கு முன் குளிர்ந்து விழுகின்றன. அவை விண்கற்கள் எனப்படுகின்றன.

04. செயற்கை இரத்தம் என்பது என்ன?
பாலித்தீன் கிளைக்கால் (Polythene glycol) என்னும் பொருளோடு சில திரவங்களைக் கலந்து தயாரிக்கப்படுவதே செயற்கை இரத்தம். இதனைக் கண்டுபிடித்தது ஒரு ஜப்பானிய நிறுவனம். இயற்கை இரத்தத்தை விட மனிதனை அதிக நாளைக்கு உயிர் வாழச் செய்யும்.

05. மழைக்குப் பின் ஒருவித மணம் வீசுகிறதே, அது ஏன்?
இடி இடிக்கிற போது, ஏற்படும் மின்னலினால் காற்றில் ஓசோன் (Ozone) எனும்வாயு ஏற்படுவது தான்.

தொகுப்பு:செல்வி. செ. ஜசிந்தா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா செட்டிகுள கல்விக்கோட்ட கீதம்


வன்னியின் முத்தென வளமுடன் இலங்கிடும்
மனங்கவர் வவுனியா செட்டிகுள
தன்னிக ரில்லெழுங் குளவள பலவள
தருகல்வி கோட்டமாஞ் சால்புறவே

அழகியல் கலைகளும் அருவிளை யாட்டமை
அந்தமி ழாங்கில மமைவொழுக்கம்
தொழிலியல் நோக்கலை கணிதமாய் மாணவர்
துக்கமாய் சொல்கலை துலங்கவுமே

அதிபரா சிரியரும் அமையதி காரிகள்
அன்னவர் பணிகள் அதிகரிக்கக்
கதிபெரு செட்டிகுள கல்வி காரியங்
காண்புகள் கதிதர கவின் பெறவே.

சுபம

ஆக்கம்: திரு. S. R. ஐங்கரலிங்கம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வித்தியாலய கீதம்

வாழ்க கணேஸ்வரா மகாவித்தியாலயம்
வாழிய வாழியவே
வன்னியில் நின்றுயர தாரகையாய் என்றும்
மின்னி ஒளிர்ந்திடவே
வண்டல் வளத்தால் வயல்கள் செழித்திடும்
வாரிக்குட்டியூரில்
கண்ணெனத் திகழும் கணேஸ் வரனருளால்
கலைகளை வளர்த்திடவே
செந்தமிழ் ஆங்கிலம் விஞ்ஞானம் கணிதம்
கைத்தொழில் கமதொழில்
உடற்கலை நுண்கலை கவின்கலை
எனபல கலைகளைப் பயின்றிடவே
பண்புடை மாணவர பலகலை பயின்றே
பண்பாய் துலங்கிடவே
அன்புடை ஆசிரியர் குழு அனைவரும்
ஒன்றாய் உழைத்திடவே
மாண்புடை அதிபரும் மனநிறைவுடனே
மகிழ்வாய் உழைத்திடவே
மலர்ந்திடும் எங்கள் மகாவித்தியாலயம்
வாழ்ந்திட வாழ்த்துகின்றோம்
கல்லூரி உயர்ந்திட உதவிகள் வழங்கிடும்
உத்தமர நிறையூரில்
கனிவாய் விளங்கும் கணேஸ்வரா வாழ்ந்திட
வாழ்த்துக்கள் கூறுகின்றோம்
எண்ணெழுத் தோங்கிட இறையருள் பெருகிட
என்றே வணங்கோமோ
எங்கு நீ சென்றாலும் நின்புகழ் ஓங்குக
என்றே வாழ்த்தோமோ.

சுபம்



(Printed & Roneo by: Ganeswara M.V)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org